


முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்போரூர் வடக்கு ஒன்றியம், கோவளம் ஊராட்சி தி.மு.க சார்பில் ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் சோபனா சுந்தர் தங்கம் ஏற்பாட்டில் கோவளம் கடற்கரையில் 50 நாட்கள் நடைபெற உள்ள மாபெரும் கிரிக்கெட் போட்டியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். அருகில் திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# சேலம் மத்திய மாவட்டத்தில் “நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!” சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சேலம் ஆர்.ராஜேந்திரன் அறிவிப்பு



கழக அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரப் போக்கிலிருந்து அரசியல்சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் விளங்குகிறது. நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் “நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!” சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்களும், அதேபோல ஒவ்வொரு பகுதி, கழகத்திலும் குறைந்தபட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்களும் நடத்துவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மாலை சுமார் 05.00 மணிக்கு தொடங்கி, இரவு 08.30 மணிக்குள் நிறைவடைந்திடும் வகையில் எழுச்சியோடும், பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகள் சென்றடையும் வகையிலும் ஒன்றிய கழக, பகுதி கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

| சட்டமன்றத் தொகுதி | கழக அமைப்பு | நாள் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| ஓமலூர் | ஓமலூர் வடக்கு ஒன்றியம் | 09.05.2025 | திரு.ஆர்.நரசிம்மன் |
| ஓமலூர் | ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | 10.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்) |
| ஓமலூர் | தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் | 11.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்)<br>வெ.சரண்யா |
| ஓமலூர் | காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | 12.05.2025 | திரு.வி.கவி.கணேசன் |
| ஓமலூர் | காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | 08.05.2025 | முனைவர் மு.சுப்ரமணியசிவா |
| சேலம் தெற்கு | அம்மாபேட்டை பகுதி | 09.05.2025 | திரு.வி.கவி.கணேசன் |
| சேலம் தெற்கு | கிச்சிப்பாளையம் பகுதி | 10.05.2025 | முனைவர் சுப்ரமணியசிவா |
| சேலம் (தெற்கு) | குகை பகுதி | 11.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (தெற்கு) | தாதகாப்பட்டி பகுதி | 12.05.2025 | முனைவர் மு.சுப்ரமணியசிவா |
| சேலம் (தெற்கு) | கொண்டலாம்பட்டி பகுதி | 08.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (மேற்கு) | சூரமங்கலம் பகுதி | 09.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்) |
| சேலம் (மேற்கு) | மெய்யனூர் பகுதி | 10.05.2025 | திரு.நாமக்கல் ராஜகோபால்<br>செ.யோகஸ்ரீ |
| சேலம் (மேற்கு) | அழகாபுரம் பகுதி | 11.05.2025 | திரு.திருச்செங்கோடு இந்திரமூர்த்தி |
| சேலம் (மேற்கு) | ஓமலூர் தெற்கு ஒன்றியம் | 12.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (மேற்கு) | சேலம் வடக்கு ஒன்றியம் | 08.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |

-4–

| | | | |
|---|---|---|---|
| சேலம் (வடக்கு) | அஸ்தம்பட்டி பகுதி | 09.05.2025 | திரு.திருச்செங்கோடு இந்திரமூர்த்தி |
| சேலம் (வடக்கு) | குமாரசாமிபட்டி பகுதி | 10.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |
| சேலம் (வடக்கு) | செவ்வாய்ப்பேட்டை பகுதி | 11.05.2025 | திரு.வி.கவி.கணேசன்<br>திரு.மு.கபில் |
| சேலம் (வடக்கு) | அரிசிபாளையம் பகுதி | 12.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |
| சேலம் (வடக்கு) | பொன்னம்மாபேட்டை பகுதி | 08.05.2025 | திரு.சி.செந்தில்குமார் |

**ஆர். ராஜேந்திரன்**
செயலாளர் – சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.
சுற்றுலாத் துறை அமைச்சர்



தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை எம்.கே.எஸ். அகாடமி மற்றும் மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்பு இணைந்து நடத்தும் புரட்சி கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் தமிழ் வார விழா மற்றும் இலவச பயிற்சி துவக்க விழா நடைபெற்றது. இதனை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார். எம்.கே.எஸ். அகாடமி நிறுவனத் தலைவர், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்டம் சார்பில் வட்ட செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தண்ணீர் பந்தல் திறந்து பொதுமக்களுக்கு பழச்சாறு, பழங்கள் ஐஸ்கிரீம் ஆகியவற்றை வழங்கினார். நிகழ்வில் என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன், இர. பொன்இளவரசன், கி.ராஜேந்திரன், வெ.சு.சத்யநாராயணன், வி.வி.ரமேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், இரா.பாலன், ப.ஆசண்முகம், எஸ்.கே.இளங்கோ, நா.கஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களைக் காக்க – திருக்கோயில்களில்

# தற்காலிகப் பந்தல்கள் - தேங்காய் நார் விரிப்புகள் - பாதுகாக்கப்பட்ட குடிநீர்- நீர்மோர் !

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னேற்பாடு!

சென்னை, மே 5-

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களைக் காக்க திருக்கோயில்களில் தற்காலிக பந்தல்கள், தேங்காய் நார் விரிப்புகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், நீர்மோர் உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகள் செய்யப்படுகிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (04.05. 2025) சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, கோதண்ட ராமர் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டனர்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை 2,911 திருக்கோயில்களுக்கு குடமுக்கு நடைபெற்றுள்ளது. இன்றைய தினம் மட்டும் திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் திருக்கோயில், திருச்சி மாவட்டம் அன்பில், சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட 31 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் ஜூலை மாதத்திற்குள் 3,000 குடமுழுக்குகளை நிச்சயம் எட்டுவோம். இந்த ஆட்சியானது குடமுழுக்கில் ஒரு பொற்காலம் படைத்த ஆட்சி என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஏராளமான குடமுழுக்கு பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குடமுழக்கில் பொற்காலம் படைத்த ஆட்சி!

இந்த அரசு பொறுப்பேற்றபின் இதுவரை திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,665.61 கோடி மதிப்பிலான 7,546.33 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 11,808 திருக்கோயில்களுக்கு திருப்பணி அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 5,917.11 கோடி மதிப்பிலான 25,150 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலைத்துறையின் திருக்கோயில்களுக்கு உபயதாரர்கள் ரூ.1,323.77 கோடி மதிப்பிலான 10,414 திருப்பணிகளை செய்து தந்துள்ளனர். பழைய வண்ணாரப் பேட்டை, கோதண்டராமர் திருக்கோயிலுக்கு திருப்பணிகளை செய்து தந்த உபயதாரர் பாபுவுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 459 பெருமாள் திருக்கோயில்கள், 42 ஆஞ்சநேயர் திருக்கோயில்கள், 41 கிருஷ்ணர் திருக்கோயில்கள், 28 ராமர் திருக்கோயில்கள் என 570 வைணவ திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடந்திருக்கின்றது. ஒரு ராமர் திருக்கோயிலுக்கே கொண்டாட்டம் போடுகின்ற காலங்களில் 28 ராமர் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கினை நடத்தியுள்ளோம். இதுபோன்ற திருப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்வதால் தான் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றுச் சாதனைகளை பதிக்கின்ற ஒரு நல்ல சூழல் நிறைவேறி இருக்கின்றது, இந்தப் பணிகள் தொடரும்.

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை காத்திடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் எந்த வகையிலும் தீப்பிடிக்காத வகையில் பாதுகாப்பான தற்காலிக கீற்றுப் பந்தல்கள் அமைத்தல், திருக்கோயில் பிரகாரங்களின் நடைபாதைகளில் தேங்காய் நார் விரிப்புகள், வெப்பத்தை தடுக்கின்ற வெள்ளை நிற பெயிண்ட் அடித்தல், நடைபாதைகளில் வெப்பத்தை குறைத்திடும் வகையில் அவ்வபோது தண்ணீர் பீச்சி அடிப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஒரு சில இடங்களில் நீர்மோர், எலுமிச்சை பானகம் போன்றவை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதுரை சித்திரை திருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, வருவாய்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, இந்து சமய அறநிலையத்துறை உள்ளிட்ட துறைகள் ஒருங்கிணைந்து சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றன. எந்த விதமான சிறு அசம்பாவிதமும் இல்லாமல் மீனாட்சி திருக்கல்யாணம், திருத்தேர் பவனி, அழகர் புறப்பாடு, அழகர் வைகை ஆற்றில் இறங்குவது போன்றவை சிறப்பாக நடைபெற வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டி இருக்கின்றார். அதன்படி அனைத்தும் சிறப்பாக நடைபெற மாவட்ட அமைச்சர்களோடு இணைந்து பணியாற்றி வருகிறோம். மீனாட்சி திருக்கல்யாண நிகழ்வில் துறையின் அமைச்சர் என்ற முறையில் பங்கேற்கவுள்ளேன். அனைத்திற்கும் எல்லாம் வல்ல இறைவனும் துணை நிற்பார்.

சட்டமன்றத்தில் நிகழ்வுகளை பார்த்திருப்பீர்கள். அதில் கோபப்பட்டு அதிகமாக கத்தியவர் எதிர்க்கட்சி தலைவர் தான். ஆனால் எங்கள் முதலமைச்சர் அனைத்தையும் உணர்ந்து ஐம்புலன்களை அடக்கி சர்வசாதாரணமாக இந்த சட்டமன்ற கூட்டத்தொடரை வெற்றிகரமாக நடத்தி முடித்து காட்டினார். ஜனநாயகத்தின் பாதுகாவலர் எங்கள் முதல்வர். சாதாரணமாக சட்டமன்ற இறுதி நாளில் முதலமைச்சர் அவர்கள் கை கூப்பி வணங்கி விட்டு செல்வார்கள். ஆனால் எங்கள் முதல்வர் அவர்களோ இன்னார், இனியவர் என்று பாராமல் அனைத்து எதிர்கட்சித் தலைவர்களுக்கும் அவர்களுடைய இருக்கைக்குச் சென்று கை குலுக்கி நான் எந்த சூழலையும் சமாளிப்பேன் என்பதை வெளிக்காட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்க்கையில் பயம் என்பது என்னவென்று தெரியாது. அவர் உறுதியாக நிற்பார், உறவுக்கு கை கொடுப்பார், உரிமைக்கு ஓங்கி குரல் கொடுப்பார், ஒன்றியத்திற்கு எந்த வகையிலும் அடிபணிந்து செல்லாத ஆற்றல் வாய்ந்த இரும்பு மனிதர் எங்கள் முதல்வர். ஆனால் ஒரே நாளில் அமித்ஷா வந்து இங்கே உட்கார்ந்து அவருடைய ஆளுமையை எடப்பாடி அவர்களுக்கு எவை எல்லாம் காட்டி பணிய வைக்க முடியுமோ அதையெல்லாம் காட்டி பணிய வைத்து ஒரே நாளில் கூட்டணியை உறுதி செய்து விட்டு சென்றார். ஆகவே எடப்பாடிக்குதான் பயம் வயிற்றிலும் தெரிகிறது கண்ணிலும் தெரிகிறது. எங்கள் முதலமைச்சர் கண்ணை பார்த்தால் 1,000 வாட்ஸ் மின்சாரம் அவர் கண்ணில் இருந்து புறப்படுகின்றது. இதில் எதிரிகள் 2026ல் பொசுங்குவார்கள்.

திருமதி தமிழிசையைப் பொறுத்தவரை பிரதமர் மோடியின் வழியிலே செயல்பட்டு தன்னைத்தானே புகழ்ந்து கொள்கின்றவர். நேற்றைய தினம் முதல்வருக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழா என்பது அரசோ அல்லது தி.மு.க.வோ எடுத்த பாராட்டு விழா அல்ல, அனைத்து பல்கலைக்கழகங்களாலும் எடுக்கப்பட்டதாகும். முதல்வர் அவர்கள் பாராட்டை விரும்பாதவர்.

ஒன்றியத்திற்கே வழிகாட்டிய முதல்வர்!

நேற்றைய தினம் அவர் பேசுகின்ற போது பாராட்டை நான் எங்கும் புறக்கணிப்பவன், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கேட்டுக் கொண்டதால் இசைந்தேன் என்று குறிப்பிட்டார். ஒன்றியத்திற்குத் தேவைப்படுகின்ற ஒரு வழிகாட்டுதலை தன்னுடைய சட்டப் போராட்டத்தால் உறுதியான நடவடிக்கைகளால் ஆளுகின்ற அரசைத் தவிர்த்து எதிர்க்கட்சி ஆட்சி செய்கின்ற மாநிலங்களில் இன்னல்களை விளைவிக்கும் ஆளுநர்களுக்கு ஒரு குட்டை வாங்கிக் கொடுத்தவர். ஒன்றியத்திற்கே வழிகாட்டியவர் எங்கள் முதல்வர் என்பதால்தான் நேற்றைய தினம் பாராட்டு விழா நடத்தப்ப ட்டது.

காலம் முழுவதும் தூக்கி வைத்து முதல்வரைக் கொண்டாடுகின்ற, போற்றுகின்ற வகையில் பாராட்டுகள் அமைய வேண்டும். இது ஒரு நாளோடு நின்று விடக்கூடாது. திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் அவர்களுக்கு வயிற்று எரிச்சல். அக்னி வெயில் ஆரம்பித்திருக்கிறது. இன்னும் அதிக வெப்பத்தோடு வார்த்தைகளைக் கக்குவார். நாங்கள் குளிர்ந்த காற்றைத் தேடி நடந்து கொண்டிருக்கின்றோம். மக்களை குளிர்ச்சியாக அழைத்துச் செல்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.



கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. அரிகிருஷ்ணன் ஏற்பாட்டில் வெங்கத்தூர் ஊராட்சி மணவாள நகர் கழக மன்ற அலுவலக வாசலில் கோடை வெயிலின் தாக்கத்தை பொதுமக்களுக்கு போக்கிடும் வகையில் நாள்தோறும் வழங்கிடும் நோக்கத்தில் நீர் மோர் பந்தலை வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து நீர் மோர், குளிர்பானம், பழ ரசம், இளநீர், தர்பூசணி ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் க.திராவிடபக்தன், ஒன்றிய செயலாளர் கே.அரி கிருஷ்ணன், ப.சிட்டிபாபு, பி.கே.நாகராஜ், என்.நந்தகோபால், தா.மோதிலால், வி.ராஜசேகர், செங்குட்டுவன், சி.ஆர்.குமரன், கொப்பூர் டி.திலீப்குமார், ஆர்.மோகனசுந்தரம், புட்லூர் ஆர்.இராஜேந்திர குமார், ஆர்.சேகர், வாசு, ரமணன், மந்தைவெளியான், டில்லி, முத்து, சத்யா, தயாளன், ஜான், பாஸ்கர், தனசேகர், எம். கார்த்தி, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




பெருநகர சென்னை மாநகராட்சி 194வது வார்டு வெட்டுவான்கேனி கற்பக விநாயகர் நகர் மற்றும் கஸ்தூரி பாய் நகர் பகுதியில் கழக கவுன்சிலர் விமலா கர்ணா நேற்று வீதிகள் தோறும் நடந்தே சென்று பொதுமக்களிடம் குறை ஆய்வு செய்து மக்கள் குறைகளை கேட்டறிந்தார்.சாலைவசதி, மின்கம்பம் மாற்றி அமைத்தல் மற்றும் மழைநீர் கால்வாய் வேண்டி மக்கள் கோரிக்கை வைத்தனர்.இந்நிகழ்வில் 194வது அ வட்ட திமுக வட்ட செயலாளர் மாஸ்டர் எஸ்.கர்ணா மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.